தமிழ்நாடு அரசு

இந்து சமய அறநிலையத்துறை

குற்றாலம், அருள்மிகு திருக்குற்றாலநாதசுவாமி திருக்கோயிலுக்கு

சொந்தமான அசையாச் சொத்துக்களில் குத்தகைதாரர்கள்/வாடகைதாரர்கள்/

பிற அனுபவதாரர்களுக்கு

# பொது அறிவிப்பு

இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான அறக்கட்டளைகள் மற்றும் குறிப்பிட்ட கட்டளைகள் ஆகியவற்றிற்கு சொந்தமான அசையாச் சொத்துக்களை அனுபவித்து வரும் குத்தகைதாரர்கள்/வாடகைதாரர்கள்/ பிற அனுபவதாரர்கள் கவனத்திற்கு,

இந்த அறிவிப்பு சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை மனுக்கள் W.P.(MD).Nos.14428/2017 மற்றும் 16833/2017 ஆகியவற்றில் 12.02.2018 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையிலும், இத்துறை ஆணையர் அவர்களின் தினத்தந்தி நாளிதழ் அறிவிப்பு நாள்.25.02.2018-ன் உத்தரவின்படியும் வெளியிடப்படுகிறது. கீழ்க்கண்ட கிராமங்களில் உள்ள இத்திருக்கோயிலுக்குப் பாத்தியப்பட்ட நிலங்கள், கட்டிடங்கள் மற்றும் மனைகள் ஆகியவற்றை அனுபவித்து வரும் குத்தகைதாரர்கள்/வாடகைதாரர்கள்/பிற அனுபவதாரர்கள் 28.02.2018 வரை தங்கள் செலுத்த வேண்டிய வாடகைத் நிலுவைத் தொகை மற்றும் இழப்பீட்டு தொகையினை தாமாக முன்வந்து இவ்வறிப்பு வெளியிட்ட நாளில் இருந்து நான்கு வாரங்களுக்குள் திருக்கோயிலில் செலுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## கிராமங்கள் விபரம்

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், – 1) குற்றாலம் 2) மேலகரம் 3) தென்காசி 4) மத்தளம்பாறை 5) பாட்டப்பத்து 6) ஆயிரப்பேரி 7) குலசேகரப்பட்டி 8) கல்லூரணி 9) இலஞ்சி 10) குணராமநல்லூர்

திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் வட்டம் – 1) கீழப்பாவூர் 1 மற்றும் 2

திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம் – 1) செங்கோட்டை மற்றும் செங்கோட்டை மேலூர் கிராமம் 2) கற்குடி 3) இலத்தூர்

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் வட்டம் – 1) கிளாங்காடு 2) கம்பனேரி புதுக்குடி II 3) சிந்தாமணி கிராமம்

திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி வட்டம் – 1) நாரணாபுரம்

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம் – 1) பாபநாசம்

தவறும் நபர்களின் மீது இந்து சமய அறநிலைய கொடைகள் சட்டம் 1959-ன் ஷரத்துக்களின்படி சொத்தை மீட்க நடவடிக்கை எடுக்கப்படும். இதன் பொருட்டு தாங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையினை இத்திருக்கோயில் அலுவலகத்தில் நேரில் வந்து கேட்டு தெரிந்து கொண்டு தொகையினை உடன் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

உதவி ஆணையர்/செயல் அலுவலர்